1973 மார்ச் 26]

திருமதி த. ந. அனந்தநாயகி : செம்பரம்பாக்கம் ஏரிக்கரை போக்குவரத்துக்கு முக்கியமான ஒன்று. ரொம்ப நாட்களாக டைவர்ஷன் வழியாகத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அதைச் சீக்கிரமாகப் பழுது பார்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : ஏரிக்கரை சீரமைப்புக்காக 7 லட்சம் ரூபாய் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. டெண்டருக்கு விடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்குப் பிறகு நிச்சயமாக அதிகாரிகள் கவனிப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Breaches of tanks near Mukkudal.

*519—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that a number of tanks near Mukkudal in Tirunelveli district were breached in November 1972 due to rains ; and

(*b*) the estimated loss due to these breaches ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) ரூபாய் 41,500.

கொத்தனேரி சீரமைப்பு.

*520 வினா.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுக்கா லக்கம்பட்டி கிராமத்தில் கொத்தனேரி சீரமைப்புக்கான திட்டம் ஏதேனும் அரசுக்கு அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :(அ) ஆம்.

(இ) அரசின் ஆய்வில் உள்ளது.

Inter-State Bus Services.

*488—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state —

(*a*) whether there are proposals under the consideration of the Government to run night service buses between Nagercoil in this State and Trivandrum in Kerala State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ), (இ) : நாகர்கோயில், திருவனந்தபுரம் வழித்தடத்தில் 1973 ஜனவரித் திங்கள் முதல் தேதியிலிருந்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையும் : கேரள மாநிலப் போக்குவரத்துக் கழகமும் முறையே மூன்று இரவு நேரப் பேருந்துப் பிரிவுப் பணிகளை இயக்குகின்றன :

முற்பகல் 10·00

திரு. என். டென்னிஸ் : நாகர்கோவில்—திருவனந்தபுரம் ரூட்டில் இப்போது பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, அவர்களின் தேவைக்கேற்றவாறு பஸ்கள் இருப்பதாக இல்லை. ஆதலால் அதிக பஸ்களை அந்த ரூட்டில் விடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தேவைப்படுமானால் அதிக பஸ்கள் விடலாம்.

* 489 வினா: திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகைக்கும் பெங்களூருக்கும் இடையே கூடலூர், குண்டல்பேட்டை, நஞ்சன்கூடு, மைசூர், மாண்டியா, வழியாகவும் கூடலூர், குண்டல்பேட்டை, மைசூர், டீனவள்ளி, கனகாபுரம் வழியாகவும் அரசுப் பேருந்துகள் விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அ. & இ : உதகைக்கும் பெங்களூருக்கும் இடையே மைசூர் வழியாக, மாநிலங்களுக்கு இடையிலான புதிய பேருந்துத் தடம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஒன்று பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. அ. பொம்மன் : நீலகிரி மக்களுக்கு அதிகம் தேவை இருப்பதால் உடனடியாக இந்த பஸ்ஸை விடுவதற்கு மைசூர் அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இந்த வழித்தடம் சம்பந்தமாக சம்மதம் கோரி மைசூர் அரசுக்கு நம் அரசு கடிதம் எழுதியுள்ளது. அதை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். தேவராசன் : சீசன் நெருங்குவதால் பயணிகளின் சௌகரியத்தை முன்னிட்டு உடனடியாக இதை நடத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல யோசனையின்படி விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.